**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S. No. 220 of 2023

Deposition of P.W. 1

Name of the Witness: திருமதி. பெரியம்மாள்

Date :08.11.2024

**குறுக்கு விசாரணை**

1. என் கணவருக்கு எங்கள் ஊரில் பாத்தியப்பட்ட சொத்து ஒரு ஏக்கர் இருக்கும். என் அப்பா 30.05.2014 அன்று எழுதி கொடுத்த தான பத்திரம் பற்றி எனக்கு தெரியாது. நான் வில்லங்க சான்று போட்டபோது தான் அதை பற்றி எனக்கு தெரிய வந்தது. என் அப்பா எழுதி கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை 07.07.2005 அன்று ரத்து செய்துவிட்டார் என் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். 13.05.2004 அன்று என் அப்பா, சித்தப்பா, 1,2 பிரதிவாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதியின் மகன் முனிராஜ் அவர்களிடமிருந்து கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். நான் விலை கொடுத்துதான் வாங்கினேன். அந்த கிரைய பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் சரிதான். என்னிடம் காட்டப்படும் 13.05.2004ல் என் பெயரில் உள்ள கிரைய பத்திரம் என்றால் சரிதான்.அந்த **கிரைய பத்திரம் பி.வா.சா.ஆ.1.** நான் வாங்கிய சொத்துக்கு பட்டா என் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். வாங்கிய 95 சென்ட் நிலத்தை நான்தான் அனுபவித்து வருகிறேன் என்றால் சரிதான். என் தந்தை பி.வா.சா.ஆ.1 ன் சொத்தை 1975ல் வாங்கியிருப்பதாக அதில் சொல்லப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் அதை தெரிந்து கொண்டே பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2. என் தந்தை அவர் பணம் கொடுத்து என் அம்மா பெயரில் வாங்கிய சொத்தை என் தாயார் எனக்கு 01.10.2003ல் கிரைய பத்திரம் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ன் மூலமாக வாங்கிய சொத்து என் அப்பாவின் தனிப்பட்ட சொத்து என்றாலும், அதை மறைத்து தற்போது பொய்யாக கூட்டு குடும்ப சொத்து என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் என் தாத்தாவின் சொத்துக்கள் என்று காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எல்லாமே என் தாத்தா சொத்துக்கள் தான். என் அப்பா எதுவும் சம்பாதிக்கவில்லை. என் தாத்தாவின் சொத்துக்களை விற்று என் அப்பா சொத்துக்களை வாங்கினார். என் தாத்தாவிற்கு அவருடைய அப்பா வழியாக சொத்துக்கள் வந்தது. என் தாத்தா பெயர் பெரியகாவேரியப்பன். என் தாத்தா மூலமாக என் அப்பாவிற்கு வந்த சொத்துக்கள் என் அப்பாவின் தனிப்பட்ட சொத்துக்கள் என்றாலும் அதில் நான் பாகம் கேட்க முடியாது என்றாலும் சரியல்ல.

3. தாவா சொத்துக்களுக்கான கிரைய பத்திரம் என் அப்பாவின் பெயரில் உள்ளது என்பதால் அது அவரின் தனிப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. என் தாத்தாவின் சொத்துக்களை விற்றுதான் அவர் சொத்துக்களை வாங்கினார். எனக்கு சிறுவயதாக இருந்ததால் அவர் என்னென்ன சொத்துக்களை விற்றார் என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ .2 ஆவணத்தை தவிர தாவா சொத்துக்கள் பொது குடும்ப சொத்து நிதியிலிருந்து வாங்கப்பட்டது என்ற ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ல் கிரைய தொகை 10 ஆயிரத்து பத்து என்றால் எனக்கு தெரியாது. முனியம்மாள் என்ற

குள்ளம்மாள் தான் எனது பாட்டி. வா.சா.ஆ.3 சொத்தை என் அப்பா குள்ளம்மாளின் சேமிப்பு பணத்திலிருந்தும், பிதுராஜ்ஜிய சொத்துக்களில் இருந்து வந்த வருமானம், விற்ற சொத்துக்களில் இருந்து வந்த பணத்தில் இருந்து வாங்கியது என்றால் சரிதான். என் தந்தை சொத்துக்களை வாங்கிய காலத்திலே என் சித்தாப்பாவும் சொத்துக்களை வாங்கியிருக்கிறார் . என் சித்தப்பா வாங்கிய சொத்துக்கள் அவருடைய அனுபோகத்தில்தான் உள்ளது. என் அப்பா சித்தன் பூர்விக சொத்துக்களை விற்று சொத்துக்களை வாங்கியது தவறு என்றால் சரியல்ல. வா.சா.4,5,6 கிரைய பத்திரங்களின் மூலமாக என் அப்பா பெயரில் சொத்துக்கள் வாங்கியிருக்கிறார் என்றால் சரிதான்.

4. எனக்கு எந்த வருடம் திருமணம் ஆனது என ஞாபகமில்லை. எனக்கு முதலில் மகள்தான் பிறந்தார். அவளின் வயது எனக்கு தெரியாது. 1975க்கு பிறகுதான் பிறந்தேன் என்றாலும், அதை மறைத்து பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. (வாதி தரப்பில் வாதியின் வயதை ஒப்புக்கொண்டு அதைபற்றி பதிலுரையில் எதுவும் ஆட்சேபணை தெரிவிக்காமல் தற்போது வாதியின் வயதை குறித்து கேள்வி எழுப்ப முடியாது என்று ஆட்சேபணை செய்யப்பட்டது. வாதியின் ஆட்சேபணைக்கு உட்பட்டு இந்த கேள்வி பதிவு செய்யப்படுகிறது.) என் அப்பா எனக்கும் சொத்துக்களை விற்றிருக்கிறார். என் கணவருக்கு என் சித்தாப்பாதான் சொத்துக்களை விற்றிருக்கிறார். என் தந்தை 01.10.2003ம் தேதி அன்று என் அப்பா எனக்கு ஒரு வீடு தானமாக எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் தானசெட்டில்மெண்ட் பத்திரம் தான். அது **பி.வா.சா.ஆ.2.** என் அப்பா 1ம்

பிரதிவாதிக்கு எத்தனை செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. என் அப்பா தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்த வீட்டை நான்தான் அனுபவிக்கிறேன் என்றால் சரிதான்.

5. என் அப்பா என் தம்பி ராஜேந்திரனுக்கு எழுதி கொடுத்த பத்திர எண்.911/2004 என்றால் உண்மைதான். என் அப்பா 1ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்தது உண்மைதான் ஆனால் அது என் தாத்தாவின் சொத்துக்கள். நான் திருமணமாகி என் கணவர் வீட்டில் இல்லை. என் அப்பா, அம்மாவிடம் தான் இருந்து வந்தேன். என் அம்மா சித்தம்மாள் எனக்கு தானசெண்டில்மெண்ட் எழுதி கொடுத்த சொத்து என்னுடைய அனுபோகத்தில் உள்ளது என்றால் என் அனுபோகத்தில்தான் உள்ளது. அது நான் கிரையம் வாங்கிய சொத்து.

6. என் அப்பா 2009ல் என் தம்பிக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்தாரா என்றால் எனக்கு தெரியாது. என் தந்தை என் தம்பிக்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரகங்கள் விவசாய நிலங்கள் என்றால் சரிதான். என் அப்பாவின் கடைசி காலத்தில் நான் தான் அவரை பார்த்து கொண்டேன் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. என் அப்பா உயிருடன் இருக்கும்வரை என் தம்பியுடன் தான் இருந்தார் என்றாலும், என் தம்பிதான் அவரை பார்த்து கொண்டார் என்றால் சரியல்ல. கோழிப்பண்ணை யார் வைத்திருந்தது என்றால் என் தம்பி ராஜேந்திரன் வைத்திருந்தார். என் 2வது தம்பி முனிவேல் இறந்து எத்தனை வருடங்கள் இருக்கும் என்று எனக்கு

தெரியவில்லை. என் தம்பி முனிவேல் இறந்தது சம்பந்தமாக போலிஸ் வழக்கு பதிவு செய்து என்னை விசாரித்தார்கள் என்றால் எனக்கு தெரியாது.

7. என் தம்பி முனிவேல் இறந்து 20 வருடங்கள் இருக்கும் என்றால் எனக்கு நினைவில்லை. முனிவேலின் மனைவி (எனது மகள் மீனா) அவர் இறந்த பிறகு வேறு திருமணம் செய்து கொண்டு விட்டார். தாவா சொத்தின் மீது லோன் தம்பி எந்த வருடம் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. என் அப்பா வாங்கிய கடன் தள்ளுபடி ஆகிவிட்டதா என்றால் என் அப்பா கடனே வாங்கவில்லை. என் தம்பி வாங்கிய கடன் தள்ளுபடி ஆகிவிட்டதா என்றால் என் தம்பி கடன் வாங்கியது மட்டும் எனக்கு தெரியும். கடன் ரத்தான விவரம் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி 27.032017 அன்று தொடர் அடமான பத்திரம் பாகலஅள்ளி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் எழுதி கொடுத்து கடன் வாங்கியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. என் தம்பி ராஜேந்திரனுக்கு மகன் முனிராஜ் உள்ளது எனக்கு தெரியும். என் அப்பா ராஜேந்திரன் மகன் முனிராஜ்க்கு உயில் எழுதி கொடுத்த விவரம் எனக்கு தெரியாது.

8. என் அப்பா அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அனைத்தையும், அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை கிரைய பத்திரம் எழுதி கொடுத்தும், செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்தும், கொடுத்துவிட்டார் என்றாலும், மீதி சொத்துக்களை 1ம் பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரமும், அவருடைய மகன் முனிராஜ்க்கு உயிலாக எழுதி வைத்துவிட்டார் என்றாலும், சொத்துக்கள் தற்போது என் அப்பாவுக்கு எதுவுமே

இல்லை என்றால் சரியல்ல. என் அப்பா எனக்கு விற்ற சொத்துக்களுக்கு நான் பட்டா வாங்கி கொண்டேன். என் தந்தை எனக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்து ரத்து செய்யப்பட்ட சொத்து எனது சுவாதீனத்தில் தான் தற்போது உள்ளது என்றாலும், பட்டாவும் என் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல.

9. தாவா சொத்துக்கள் பூர்விக சொத்துக்கள் இல்லை என்றாலும், பொய்யான வழக்கு போட்டுபிரதிவாதிகளை கஷ்டபடுத்துகிறேன் என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.